சுருக்கம்

நிலமாற்றம் – தேனி மாவட்டம் – ஆண்டிப்பட்டி வட்டம் – கடமலைக்குண்டு கிராமம் – புல எண்.218, 219/2 மற்றும் 220–இல் 5.95.5 ஹெக்டேர் நிலம் – வனத் துறைக்கு நிலமாற்றம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் [நிமு4(1)] துறை

அரசாணை (நிலை) எண். 15

நாள்: 11.1.2010

படிக்கவும்:

1. மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மாவட்டம் கடித எண்.B4/28263/09 நாள் 18.11.09 மற்றும் 26.11.09.
2. முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கடித எண்.வி1/28677/2009 நாள் 10.12.09.

**********

ஆணை:–

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், கடமலைக்குண்டு கிராமத்தில் உள்ள புல எண்.218, 219/2, 220–ல் 5.95.5 ஹெக்டேர் நிலம் வருவாய்த் துறைக்கு சொந்தமான புறம்போக்கு நிலங்களாகும். 5.95.5 ஹெக்டேர் அல்லது 14.71 ஏக்கர் நிலத்தை வனத்துறைக்கு நிலமாற்றம் செய்வது தொடர்பாக கடமலைக்குண்டு கிராமத்தில் 'ஏ1' நோட்டிஸ் விளம்பரம் செய்யப்பட்டதில், ஆட்சேபணை ஏதும் வரப் பெறவில்லை என்றும், இந்நிலங்களை வனத்துறைக்கு நிலமாற்றம் செய்து வழங்கிட ஆட்சேபணை இல்லை என சம்பந்தப்பட்ட பாலூத்து ஊராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று, பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் தெரிவித்துள்ளார் என்றும், பிரஸ்தாப புலங்களில் கோவில்கள், சர்ச், மசூதி போன்ற வழிபாட்டுத் தலங்களோ, வேறு நிலையான கட்டிடங்களோ இல்லை என்றும்; புராதன சின்னங்கள், மயானம், கிணறு போன்றவை எதுவும் இல்லை எனவும்; விவசாய பயன்பாட்டிற்கு உதவாத கருங்குன்று, முட்புதர், செடி கொடிகளாகவே இந்நிலங்கள் அமைந்துள்ளன என்றும்; அரசின் எதிர்கால திட்டத்திற்கு தேவைப்படாத நிலமாக இவை உள்ளன என்று பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் தெரிவித்துள்ளார் என்றும்; பிரஸ்தாப புலம் 12.11.09 அன்று தேனி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் புலத்தணிக்கை செய்யப்பட்டுள்ளது என்றும்; நிலமாற்றம் செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ள புலங்கள் வனத்துறைக்கு நிலமாற்றம் செய்திட தகுதியானவையென பரிந்துரைத்துள்ளார் என்றும்; மேலும், இப்புலங்கள் குன்று, அனாதீனம் என பாகுபாடு செய்யப்பட்டுள்ள வருவாய்த் துறைக்கு சொந்தமான நிலங்களாகும், இவை அரசின் பிரத்யேக தடையாணைக்கு உட்பட்ட நிலங்கள் அல்ல என்றும், இப்புலங்களில்

ஆக்கிரமிப்புகள் எவையும் இல்லை என்றும், இப்புலங்கள் நீண்ட கால, குறுகிய கால குத்தகைக்கு வழங்கப்பட்ட நிலங்கள் அல்ல என்றும்; நிபந்தனையுடன் கூடிய ஒப்படை வழங்கப்பட்ட நிலமல்ல என்றும், பஞ்சமர் தரிசு நிலமோ, தடையாணைப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்ட நிலமோ அல்ல என்றும், புல எண்.218—ல் உயர் மின் அழுத்தக்கம்பி கிழ்மேலாக புலங்களின் ஊடே செல்கிறது, புல எண்.220, 218, 219/2—ல் மழையினால் நீர்வரத்து பெற்ற ஒரு சிற்றோடை கிழக்கிலிருந்து மேற்காகச் செல்கிறது, இது மழைக்காலங்களில் மட்டுமே ஓடும் காட்டு ஓடையாகும் என்றும்; பிரஸ்தாப புலங்களில் விவசாயப் பயன்பாட்டிற்கு உபயோகமில்லாத குன்று, முட்புதர், செடி கொடிகள் உள்ளன என்றும், எளிதில் பொதுமக்கள் சென்று அடைந்திட இயலாத இடத்தில் அமைந்துள்ள இந்த நிலம் அரசின் பிற திட்டங்களுக்கு உகந்த நிலமாக இராது என்றும் பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். மேலும், அரசு புறம்போக்கு நிலங்களை அரசு துறைகளுக்கு இலவசமாக நிலமாற்றம் செய்ய அரசாணைகள் உள்ளன எனினும், இந்நேர்வில் நகராட்சித் துறை வருவாய் ஈட்டித்தரக்கூடிய பேருந்து நிலையம் கட்டும் நோக்கத்திற்கு பயன்படுத்தவுள்ள வனத்துறை நிலத்திற்கு ஈடாக வருவாய்த்துறை நிலம் வனத்துறைக்கு வழங்கப்படவுள்ளது என்றும், எனவே, விதிகளின்படி நிலஉரிமைமாற்ற அடிப்படையில் நிலமதிப்பு நிர்ணயித்து நகராட்சியிடமிருந்து நிலமதிப்பினை செலுத்தப்பெறலாம் என்றும், மேலும், தேனி அல்லிநகரம் நகராட்சியும், நிர்ணயிக்கப்படும் நிலமதிப்பினை செலுத்த சம்மதம் தெரிவித்துள்ளது என்றும்; வழிகாட்டிப் பதிவேட்டின்படியான நிலமதிப்பு 1 ஏக்கருக்கு ரூ.21,500/—, 1 ஹெக்டேருக்கு ரூ.53,500/— என உள்ளது என்றும், விற்பனைப்புள்ளி விவர அடிப்படையில் நிலமாற்றம் செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ள நிலங்களின் 1 ஏக்கர் மதிப்பு ரூ.21,657/— ஆகிறது என்றும், வழிகாட்டிப் பதிவேட்டின் படியான மதிப்பைவிட விற்பனைப்புள்ளிவிவர அடிப்படையில் நிலமதிப்பு அதிகமாக உள்ளதால், நிலமாற்ற நிலங்களின் ஒரு ஏக்கர் நிலமதிப்பினை ரூ.21,657/— என நிர்ணயிக்கலாம் என்றும்; அதனடிப்படையில் நிலத்தின் மதிப்பு ரூ.3,18,574/— என நிர்ணயம் செய்யலாம் என்றும், அரசால் நிர்ணயிக்கப்படும் நிலமதிப்பினை செலுத்துவதற்கு அந்நகராட்சி சம்மதம் தெரிவித்துள்ளது எனவும், எனவே ஆண்டிப்பட்டி வட்டம், கடமலைக்குண்டு கிராமம், புல எண்கள்.218, 219/2 மற்றும் 220 ஆகியவற்றில் 5.95.5 ஹெக்டேர் அல்லது 14.71 ஏக்கர் நிலத்திற்கு நிலஉரிமை மாற்றம் என்ற அடிப்படையில் நிலமதிப்பு நிர்ணயித்தும், வருவாய் நிலை ஆணை எண்.23—ன் கீழ் ஒரு மடங்கு நிலக்கிரயத்தினை தேனி அல்லிநகரம் நகராட்சியிடம் இருந்து வசூல் செய்யவும், பின்னர் அந்நிலங்களை வனத்துறைக்கு வழக்கமான நிபந்தனைகளுக்குட்பட்டு நிலமாற்றம் செய்யவும் பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரைத்துள்ளார்.

2. காப்புவனம் என்ற வகைபாட்டில் உள்ள வனத்துறை இடத்தை, பேருந்து நிலையம் அமைக்க, ஒதுக்கீடு செய்ய மத்திய அரசால் முதல்நிலை அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும், வன (பாதுகாப்பு)ச் சட்டம் 1980 பிரிவு 2—ன் படி 2.98.0 ஹெக்டேர் வனத்துறை நிலம் தேனி அல்லி நகரம், நகராட்சிக்கு பேருந்து நிலையம் அமைப்பதற்காக வழங்கினால் மட்டுமே சில நிபந்தனைகளுக்குட்பட்டு 2—ம் நிலை அனுமதி பெற இயலும் என மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளதாகவும், தேனி மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையினை ஏற்று தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், கடமலைக்குண்டு கிராமம், புல எண்.218, 219/2 மற்றும் 220—ல் 5.95.5 ஹெக்டேர் நிலத்தினை பேருந்து நிலையம் அமைக்க தேனி—அல்லி நகரம் நகராட்சியிடமிருந்து நிலக்கிரயத்தினை வசூல் செய்து கொண்டு, வருவாய் நிலை ஆணை எண்.23A—ன் கீழ் வனத்துறைக்கு நிலமாற்றம்

செய்யலாம் என முதன்மைச் செயலர் மற்றும் நில நிருவாக ஆணையர் மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் பரிந்துரைத்துள்ளார்.

3. முதன்மைச் செயலர் மற்றும் நில நிருவாக ஆணையரின் பரிந்துரையினை அரசு நன்கு ஆய்வு செய்து, தேனி மாவட்டம், தேனி வட்டம், தேனி அல்லிநகரம் நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் அமைக்க தேனி வட்டம், அல்லி நகரத்தில் உள்ள 7.35 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள காப்புவனத்தை மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளவாறு, வனத்துறை தேனி–அல்லிநகர நகராட்சிக்கு வழங்கவும், அதற்கு ஈடாக ஆண்டிப்பட்டி வட்டம், கடமலைக்குண்டு கிராமம் புல எண்கள்.218, 219/2 மற்றும் 220 ஆகியவற்றில் 5.95.5 ஹெக்டேர் அல்லது 14.71 ஏக்கர் நிலத்தினை வனத்துறை என வகைபாடு செய்தும் தேனி அல்லிநகரம் நகராட்சியிடமிருந்து ஏக்கர் ஒன்றுக்கு நிலமதிப்பு ரூ.21,657/– வீதம் 14.71 ஏக்கருக்கான மொத்த நிலகிரையத் தொகை ரூ.3,18,574 (ரூபாய் மூன்று லட்சத்து பதினெட்டாயிரத்து ஐநூற்று எழுபத்து நான்கு மட்டும்) வசூல் செய்து கொண்டு, வருவாய் நிலை ஆண்ண எண்.23A–ன் கீழ் உள்ள வழக்கமான நிபந்தனைகளுக்குட்பட்டும், வனத்துறையின் நிபந்தனைகளுக்குட்பட்டும் மற்றும் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டும் வனத்துறைக்கு நிலமாற்றம் செய்து அரசு ஆணையிடுகிறது.

(i) கல்கட்டணம் உட்பிரிவுக் கட்டணம் போன்ற இதரக் கட்டணங்களை கேட்புத் துறை செலுத்த வேண்டும்;

(ii) அரசு விதிக்கும் நிபந்தனைகளுக்குட்பட வேண்டும்;

(iii) எந்த நோக்கத்திற்காக நிலமாற்றம் செய்யப்படுகின்றதோ அதற்காக மட்டுமே பிரஸ்தாப நிலத்தினை பயன்படுத்துமாறு கேட்புத் துறை அறிவுறுத்தப்படுகிறது;

(iv) எதிர்காலத்தில் பிரஸ்தாப புலமோ அல்லது அதன் ஒரு பகுதியோ தேவையில்லை என்றால், அதனை அரசு வருவாய்த் துறையிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும்;

(v) வனத்துறைக்கு நிலமாற்றம் செய்யப்பட்ட நிலங்களை காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் மற்றும் அதற்காகும் செலவினை கேட்புத் துறை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

4. மேலே, பத்தி 3–இல் உள்ள ஆணையை செயல்படுத்த உரிய நடவடிக்கை

எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் முதன்மைச் செயலர் மற்றும் நில நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

5. மேலே, இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்துடன் வரப்பெற்ற விசாரணை ஆவணங்கள் இத்துடன் திருப்பி அனுப்பப்படுகின்றன. அதனை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை அனுப்புமாறு முதன்மைச் செயலர் மற்றும் நில நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**கி.தனவேல்,**
**அரசு செயலாளர்.**

**பெறுநர்**
முதன்மைச் செயலர் மற்றும் நில நிருவாக ஆணையர், சென்னை–5.
மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மாவட்டம்.
**நகல்**
சுற்றுச் சூழல் (மற்றும்) வனத் துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
வருவாய் (மற்றும்) வீட்டுவசதி துறை அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
அரசு துணைச் செயலாளர் (நிமு2), வருவாய்த்துறை, சென்னை–9.
இ.கோ./உதிரி.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

12.1.10
பிரிவு அலுவலர்